ரூர்கள். நம்முடைய தமிழ் நாட்டிலே தீண்டாமை ஒழிப்பு பல காலமாக நடந்து வருகிறது. அதே போன்ற பொன் விழா நிகழ்ச்சி நடத்த நம் முடைய அரசு உத்தேசித்திருக்கிறதா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அதே போன்ற நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்றுதான் இப்பொழுது முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பொழுது தேதி கொடுக்கிறார் களோ அப்போழுது அதை நடத்தி விடலாம்.

Subordinate Judge's Court at Namakkal.

* @255 *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Subordinate Judge's Court at Namakkal, Salem District ; and

(*b*) if so, when?

நாமக்கல்லில் சார்பு நீதிபதி நீதி மன்றம்.

திரு. எ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) சேலம் மாவட்டம், நாமக்கல்லில், சார்பு நீதிபதி நீதி மன்றம் ஏற்படுத்துவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ)and (இ) நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு நாமக்கல்லில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க பரிவுரை செய்து உள்ளது. 1975ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் அக்குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் ஐந்தாண்டு காலத்தில் ஒவ்வொரு பரிந்துரை யின் முக்கியத்துவத்தையும், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு படிப்படியாக செயல்படுத்தப்படும்.

திரு. எ. பாலசுப்ரமணியம் : அது எப்பொழுது கொண்டு வரப்படும் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இது குறித்து இரண்டு ஆண்டு களுக்கு முன்பாகவே தமிழகத்தின் முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த

@ 19–4–1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.